524—

இரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் அமைத்தல்.

* 4582—திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூர் திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு இது செயல்முறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1992–93ஆம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்திற்கு தென்னக ரயில்வேக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரயில்வே அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் இந்த வேலை செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் சொல்லாற்றல் மட்டுமல்ல, செயலாற்றலும் அமையப் பெற்று விளங்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு நல்ல சுமுக உறவு இருக்கின்ற இந்த நேரத்தில், அவர்கள் அடிக்கடி மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, பேசி வருகிற காரணத்தால், இந்த நெருக்கடி நிறைந்த பகுதியில் மக்கள் தொகை பெருகி வருகிற நேரத்தில் இந்த மேம்பாலத்தை உடனடியாக அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளில் மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதில் ஒரு தெளிவான விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு

1992 ஏப்ரல் 9]

இரயில்வே மேம்பாலம் கட்டுகிற நேரத்தில் 50 சதவீதம் மாநில அரசும், 50 சதவீதம் நம்முடைய இரயில்வே துறையும் தான் முதலீடு செய்து கட்ட வேண்டி இருக்கிறது. நாம் ஒரு பட்டியலைத் தயாரித்து அவர்களிடத்திலே கொடுக்கிறோம். இரயில்வே துறைதான் அந்தப் பட்டியலுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு வேலைகளைத்தான் எடுக்கிற அளவுக்கு நிதியினை ஒதுக்குகிறார்கள். அதன் காரணமாக பல்வேறு வேலைகள் இன்றைக்கு தாமதப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக நம்முடைய முதல்வர் அவர்களும், மத்திய அரசும், இரயில்வே துறையும் அதிகமான நிதி ஒதுக்கி மேம்பாலம் கட்ட வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். எனவே அரசு இதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரயில்வே துறை ஒதுக்குகிற நிதியாதாரத்தைப் பொறுத்து அந்தந்த ஆண்டுகளில் அந்தந்தப் பணிகள் எடுத்துச் செய்யப்படுகிறது என்பதையும், நம்முடைய உறுப்பினர் கேட்கிற பகுதிக்கு 1992–93-ல் நிதியில்லை என்று இரயில்வே துறை தெரிவித்து விட்டது, எனவே 1993–94 ஆம் ஆண்டு பட்டியலிலே அதைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே இரயில்வே துறையின் அங்கீகாரம் பெற்றவுடன் உடனடியாக அந்த வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 525, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

525—

கல்பட்டு—அமிர்தி சாலை செப்பனிடல்.—

* 6212—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் கல்பட்டு-அமிர்தி சாலை செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பராமரிப்பு நிதி நிலையைப் பொறுத்து, வரும் நிதியாண்டில் இந்த வேலை எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.